Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 36 / 2023

**DEPOSITION OF PETITIONER SIDE WITNESS No.2**

| | | | |
|---|---|---|---|
| Name: | ரமணி | Calling: | மேஸ்திரி வேலை |
| Father's/Husband's Name: | ஆறுமுகம் | Religion: | |
| Village: | அம்பலூர் | Age: | 45 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 09.06.2025

(எதிரி ஆஜர் கு.வி.மு.சா 311 ன் படி மனுத்தாக்கல் செய்யபட்டு அனுமதிக்கபட்டது.)

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :

எதிரி எனக்கு என்ன முறை வேண்டுமென்றால் அண்ணன் முறையாகும். அ.சா.1 எனது மகள், எனது மற்றொரு சகோதரியின் பெயர் மல்லிகா. மல்லிகா என்பவர் தான் என் மீது வாணியம்பாடி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். என் அண்ணி ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினராக உள்ளார் என்றால் சரிதான். என் அண்ணன் மல்லிகாவிற்கு சப்போட்டு செய்கிறார் என்பதற்காக எதிரிக்கும் எங்களுக்கும் முன்விரோதம் உள்ளதா என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது நான் வெளியில் வேலைக்கு சென்றுவிட்டு இருந்தேனா என்றால் சரிதான். என் வீட்டிற்கும் நான் வேலைசெய்யும் இடத்திற்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் 2 கி.மீ க்குள் இருக்கும். என் மகள் சம்பவம் நடந்ததாக சொன்ன உடன் வீட்டிற்கு வந்துவிட்டேனா என்றால் வந்துவிட்டேன். வந்த உடனே 3 மணியளிவில் மருத்துவமணைக்கு சென்றுவிட்டோமா என்றால் ஆமாம். என் வீட்டின் தெருவிற்கு யார் கான்கிரேட் எடுத்து ரோடு போட்டார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. சம்பவத்தன்று ரோடு போடும் போது எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் நான்கு ஐந்து நபர்கள் இருந்திருப்பார்கள். சம்பவம் முடிந்த பின்பு காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கும் போது எனது மகள் அடிப்பட்டு இருந்த போது சிறிது மயக்கத்தில் இருந்தாரா என்றால் சரிதான். மருத்துவமணைக்கு செல்லும்

போதும் எனது மகள் மயக்கத்தில் தான் இருந்தாரா என்றால் சரிதான். மருத்துமனைக்கு போலிஸார் வரும்போது எனது மகள் மயக்கத்தில் இருந்ததால் நடந்த சம்பவம் பற்றி போலிஸாரிடம் சொன்னேனா என்றால் சரியல்ல. மருத்துமணையில் காவலர் பொன்மணி என்பவர் தான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றால் சரிதான். என் மகளிடம் மருத்துவமணையில் நான்கு ஐந்து தாளில் கையொப்பம் வாங்கினார்களா என்றால் ஒரு தாளில் தான் கையொப்பம் வாங்கினார்கள். எதிரி எனது மகளை அடிக்கவில்லை என்றாலும் திட்டவில்லை என்றாலும் சரியல்ல, அடித்தார். எதிரி அடித்ததை நான் நேரடியாக பார்தேனா என்றால் இல்லை. எனக்கும் எதிரிக்கும் உள்ள முன்விரோத்தின் பேரில் நான் எதிரியின் மீது பொய்யான புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மகளை அடித்ததை யார் யார் நேரில் பார்த்தார்கள் என்றால் பாலு என்பவர் பார்த்தார். பாலு என்பவரை விசாரித்தால் தான் அவர் நேரில் பார்த்தாரா என்று தெரியவரும் சரிதான்.அ.சா.1 சர்மிகா, ஆறுமுகம், ரமணி , நந்தினி, பாலு, பிரகாசம் ஆகியோர் எனக்கு உறவினர் என்றால் ஆமாம். பாலு, பிரகாசம் என்பவர்கள் தெரிந்த நபர்கள். சம்பவம் நடந்த இடத்திற்கு எதிரே தான் சேகர் என்பவரின் வீடு உள்ளதா என்றால் ஆமாம். சம்பவம் நடந்த இடத்தில் தான் ஜெகன் , பழனி என்பவரின் வீடு உள்ளதா என்றால் பழனி என்பவரின் வீடு உள்ளது, ஜெகன் என்பவர் வீடு பற்றி தெரியவில்லை. சம்பத்தை பழனி என்பவரின் வீட்டில் உள்ளவர்கள் பார்த்திருப்பாரா என்றால் பழனி என்பவர் இறந்து விட்டார். எதிரி என் மகளை அடிக்கவில்லை என்றாலும் , திட்டவில்லை என்றாலும் என் மகள் கொடுத்த பொய் வழக்கிற்கு சாதகமாக எதிரிக்கு எதிராக பொய்சாட்சியம் அளிக்கிறேனா என்றால் சரியல்ல. என் மகளுக்கு எதிரித்தாக்கி கன்னத்தில் வீக்க காயம் இல்லை என்றாலும் தொண்டை பகுதியில் கன்னிய காயம் இல்லை என்றாலும் சரியல்ல.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) ரமணி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K